# கற்றல் முகாம்

## சுயவிடைக் கருத்தறிதல்

படைப்பு : திருமதி அமுதா

# கருத்தறிதல்

**கருத்தை அறிதல்**

கொடுக்கப்பட்ட பனுவலின்
கருத்தை அறிதல்

# சுயவிடை

பனுவலின் கருத்தைப் புரிந்துகொண்டு சுயமாக விடை எழுதுதல்

# கருத்தறிதல்

## கவனத்தில் கொள்ளவேண்டியவை

- வினாவைப் படித்துப் புரிந்துகொண்டு பொருத்தமான விடை / விடைகளைக் கண்டறிய வேண்டும்.
- வினாவின் முக்கியச் சொல்லை அடையாளம் காணவேண்டும், அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- வினாவுக்கு ஏற்ப விடைகளை எழுதி முடிக்கவேண்டும்.

# கருத்தறிதல்

## கவனத்தில் கொள்ளவேண்டியவை

- தேவையின்றிச் சொற்களை மாற்றி எழுதவேண்டியதில்லை.
- தவறான சொல்லை எழுதிவிட்டால் மொழியில் பிழை ஏற்படும்.
- சிறு சிறு வாக்கியங்களாக விடைகளை எழுதி வினாவுக்கேற்ப முடித்து எழுத வேண்டும்.

# கருத்தறிதல்

## கவனத்தில் கொள்ளவேண்டியவை

- நீண்ட வாக்கியங்களை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். எழுவாய், பயனிலை இயைபு இல்லாமல் போய்விடும்.
- விடையை அப்படியே பார்த்து எழுதுதல் கூடாது. கருத்துக்கு அரை மதிப்பெண்கள் மட்டுமே வழங்கப்படும்.

# கருத்தறிதல்

- வினாவின் முக்கியச் சொல்லை அடையாளம் காணவேண்டும்.
- அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**வினா வகைகள்**

- எது, எவை, எதை, எவற்றை, எவ்வாறு, எப்படி, எப்போது, என்ன, எத்தகைய
- ஏன், யாது, யாவை
- ஒப்பீடு, வேறுபாடு, காரணம்

# வினா வகை

## எது? / ஏன்?

- எது அரிய சொத்து எனக் கருதப்படுகிறது ஏன்?
  (5 மதிப்பெண்கள்)

உள்ளம் என்னும் உயர்ந்த மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டே ஊக்கமுடைய மனிதர்கள், தங்கள் துறைகளில் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். அதனால்தான் உடலில் உயிர் இருக்கும்வரை நம்மோடு இருக்கக்கூடிய அரிய சொத்து நமது உள்ளம் எனக் கருதப்படுகிறது .

# வினா வகை

## எவ்வாறு?

- நட்பு என்பது எவ்வாறு இருக்கவேண்டும் ?

  (4 மதிப்பெண்கள்)

நட்பு முகத்தில் மட்டும் மகிழ்ச்சியைக் காட்டுவதாக இல்லாமல் உள்ளத்தில் அன்பு உடையதாக இருக்கவேண்டும். நண்பன் தவறு செய்யும்போது அவனை இடித்துரைக்க வேண்டும். நண்பன் வெறுத்துப் பகைமை கொண்டாலும் தக்க இடத்தில் அறிவுரை கூறித் திருத்தவேண்டும். இவ்வாறுதான் நட்பு என்பது இருக்கவேண்டும்.

# வினா வகை

## ஒப்பீட்டு வினாக்கள் (வகை 1)

- **எண்ணங்கள் எதனால் தீப்பொறியோடு ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளன? (6 மதிப்பெண்கள்)**

ஒரு தீப்பொறி விழுந்ததும் முதலில் கனிகிறது, பின்னர் புகைகிறது, அதன்பின் கொழுந்துவிட்டு எரிகிறது. அதுபோல் நம் உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றினால் நாம் தினமும் அதைப்பப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே இருப்போம். நாளடைவில் அதனைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் நமக்கு ஏற்படும். அந்த எண்ணமே நமது செயலாக மாறும். அதனால்தான் எண்ணங்கள் தீப்பொறியோடு ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளன.

# வினா வகை

## ஒப்பீட்டு வினாக்கள் (வகை 2)

**நல்ல நண்பர்கள் ஏன் ஒரு தூண்டுகோலுடன் ஒப்பிடப்படுகிறார்கள்? (6 மதிப்பெண்கள்)**

- ஒரு தூண்டுகோல்தான் விளக்கைத் தூண்டி நன்றாக எரியவிட உதவுகிறது. அதுபோல் நம்மைத் திருத்தி நல்வழிப்படுத்த நல்ல நண்பர்கள் இன்றியமையாதவர்கள். எவருக்கும் கட்டுப்படாதவரும் நல்ல நண்பருக்குக் கட்டுப்படுவதுண்டு. அதனால்தான் நல்ல நண்பர்கள் ஒரு தூண்டுகோலுடன் ஒப்பிடப்படுகிறார்கள்.

# வினா வகை

## யாவை? & ஏன்? வினாக்கள்

- **இளையர்களிடம் இருக்கவேண்டியவை யாவை என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்? ஏன்?(5 மதிப்பெண்கள்)**

- நல்ல மனப்பாங்கு உடைய மனிதர்களிடம் இருக்கும் அறிவும் திறமையுமே பயனுடையவையாகும். அதனால்தான் இளையர்களிடம் நல்ல கல்வியறிவு, நற்பண்புகள், கற்றதைத் திறமையோடும் விருப்பத்தோடும் செயல்படுத்தும் மனப்பாங்கு, சூழல்களைச் சரியாகப் புரிந்து சமாளிக்கும் தன்மை, சரியான முடிவை எடுக்கும் திறன் யாவும் இருக்கவேண்டும் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

# கருத்தறிதல்

❖ வினாவுக்கேற்ப விடைகளை எழுதி முடிக்கவேண்டும்

எகா: நினைவாற்றலையும் மறதியையும் சீர்படுத்தி வாழ நாம் என்ன செய்ய வேண்டும் ? ஏன்?

(5 மதிப்பெண்கள்)

- நினைவாற்றலையும் மறதியையும் சீர்படுத்தி வாழ நாம் காய்கறிகள், கீரைகள் முதலான ஆரோக்கிய உணவு வகைகளை உண்ண வேண்டும். அப்போதுதான் நம் மூளை நன்றாகச் செயல்படும்.

# கருத்தறிதல்

- தேவையின்றிச் சொற்களை மாற்றி எழுதவேண்டியதில்லை

- நினைவாற்றலையும் மறதியையும் சீர்படுத்தி வாழ நாம் காய்கறிகள், கீரைகள் முதலான ஆரோக்கிய உணவு வகைகளை உண்ண வேண்டும்.
(சாப்பாட்டுப் பொருட்களைச் சாப்பிட வேண்டும்)x
அப்போதுதான் நம் மூளை நன்றாகச் செயல்படும்.
(அறிவு நன்றாக வேலைசெய்யும்)x

# சொற்பொருள்

- **அந்தச் சொல்லுக்கான நேரடிப் பொருளாக அமைதல்**

எ.கா: பகைமையும் – விரோதமும் (எதிரியும் – தவறு)

- **பொருள் பகுதிக்குப் பொருந்தி இருத்தல்**

எ.கா: அகலுவதை – நீங்குவதை (செல்வதை – தவறு)

# சொற்பொருள்

- **அடிச்சொல்லுக்குப் பொருள் காணுதல்**

எ.கா: வளப்படுத்தக்கூடிய – செம்மையாக்கக்கூடிய

வளம் – செம்மை, செழிப்பு

- **சொல்லின் அமைப்புக்கேற்பவே பொருளின் அமைப்பும் அமைதல் வேண்டும்**

எ.கா: உறுதியாக

நிச்சயமாக, திடமாக

(நிச்சயம், திடம் - தவறு)

# சொற்பொருள்

- அந்தச் சொல்லைச் சொந்த வாக்கியத்தில் அமைத்துப் பார்த்துப் பொருளறிதல்

எ.கா: சாதிக்க

என்னால் எதையும் சாதிக்க முடியும்

என்னால் எதையும் செய்துமுடிக்க முடியும்




நன்றி